# சலீம்

சையத் ஆல்வி ரோடு அப்போதுதான் சோம்பல் முறித்து எழுந்திருந்தது. எந்நேரமும் ஆள் நடமாட்டம் மிகுந்த தெரு. இயல்பில் அத்தெரு உறங்குவதேயில்லை. நாள் முழுக்க மனிதர்களைச் சுமந்த சாலைகளுக்கு அதிகாலை நான்கு முதல் ஐந்து வரைதான் ஆசுவாசமான நேரம். பணம் மாற்றுவதற்கான அலுவலகம் அதிகாலை நேரத்தில் வெறிச்சோடிக் கிடந்தது. கேட் நம்பர் ஒன்றின் வழியாக சென்ற ஓரிருவர் சற்றே பயந்து விலகியபடி சென்று கொண்டிருந்தனர். இறுதிச்சடங்குகளில் வானத்தை நோக்கி சுடும் வழக்கத்தைப் போல லோகன் வானத்தை நோக்கி வசைகளை பொழிந்துகொண்டிருந்தார். விலகிச் சென்றவர்கள் லோகனின் பார்வை சென்ற திசையை அனிச்சையாக பார்த்துச் சென்றனர்.

லோகன் அந்த மாலின் செக்யூரிட்டி. கட்டிடத்தின் நான்கு வாசல்களில் ஏதாவதொன்றின் முன் நின்று கொண்டிருப்பதுதான் வேலை. எப்போதாவது இப்படி உச்சநிலை எய்திவிடுவார். அந்தச் சமயத்திலெல்லாம் வானத்தையோ, ஆளில்லாத இடங்களைப்

பார்த்தோ உக்கிரத்துடன் சண்டையிடுவார். ஆங்கில வசைகளின் ஊடே தமிழும் கலந்து வரும். தாண்டிச் செல்பவர்கள் ஒருகணம் குழம்பி அதிர்ந்து விலகிச்செல்வர். மற்ற செக்யூரிட்டிகள் அவரின் அருகில் கூட செல்ல மாட்டார்கள். பழகியிருந்தது அவர்களுக்கு. பத்து நிமிடங்களுக்குப் பிறகு அவரே வந்து தானாக திறந்து மூடும் கண்ணாடிக் கதவருகே நிற்பார். சில நாட்களில் கட்டுக்கடங்காமல் உச்சமடைந்து விடுவார். அந்த சமயங்களில் அவர் முகம் தவில் வித்துவான் ஆவேசத்துடன் கண்ணை மூடிக்கொண்டு தவில் அடிப்பதை ஒத்திருக்கும். இந்த வசைப்பாடு முப்பது நிமிடத்திற்கும் மேல் கூட நீளும். அச்சமயங்களில் சலீம்தான் வரவழைக்கப்படுவான்.

சலீம் அதே மாலில் அரிசி செக்ஷனின் நைட் டியூட்டி. சலீமுக்கு மட்டுமே அடங்கிப் போவார் லோகன். அடிக்கடி மனப்பிளவு அடைபவராக இருந்தாலும் நீண்ட நாள் பணிபுரிபவர் என்பதால் வேலையில் சில சலுகைகள் இதுபோன்று உண்டு. செக்யூரிட்டி எந்நேரமும் நின்று கொண்டே இருக்க வேண்டும். லோகனைத் தவிர அதைப் பின்பற்றுபவர் எவரும் இல்லை. பன்னிரண்டு மணி நேரமும் நின்று கொண்டு இருக்கத் தேவையில்லை என்றாலும் லோகன் வேலை

நேரத்தில் அமர்வதில்லை. முக்கியமாக பிற ஆட்களோடு வாக்குவாதம் செய்பவராக இல்லை. அவர் வாக்குவாதம் எல்லாம் வானை நோக்கியே இருந்தன. அங்கே இருந்து யாரோ இவரை எரிச்சல் மூட்டுவது போன்றே அவரது உரையாடல் இருக்கும். அன்று கொஞ்சம் அதிகமாகிப் போனதை உணர்ந்த சக செக்யூரிட்டி முத்தையா இப்படிச் சொன்னார்.

இந்த பைத்தியக்காரப் பயல நம்ம கூட டூட்டி போட்டு தாலியறுக்கறானுங்க. ஆளில்லாத எக்சிட்ல போடுங்கடான்னு சூப்பர்வைசர கேட்டா போட்டுத் தொலைய மாட்டேங்கறானுங்க. போனை எடுத்து அரிசி செக்ஷனின் சலீமுக்கு அடிக்கலாமா என யோசித்தபடி லோகனைப் பார்த்துக்கொண்டிருந்தார். அழுத்தம் உச்சத்தில் போகும்போது வெடிக்குமல்லவா அதைப்போல வெடித்துக்கொண்டிருந்தார் லோகன். மெல்ல கூட்டம் சேர்ந்துகொண்டிருந்தது. ஓரிருவர் நின்று பார்த்து சென்றுவிட்டனர். தூரத்து காபிக்கடையின் மேசை மேல் கன்னத்தை வைத்து தூங்குபவரில் இருவர் எழுந்து பார்த்து மறுபடி உறக்கத்திற்குள் சென்றனர். அதற்குள் யாரோ சலீமுக்கு தகவல் சொல்லி வந்து விட்டான்.

இல்லாத எதிராளியை நோக்கி லோகனுடன் சேர்ந்து சலீமும் கொஞ்ச நேரம் திட்டுவான். பிறகு சமாதானம் சொல்லி அழைத்து வந்துவிடுவது சலீமின் டெக்னிக். அதைத்தான் அன்றும் செய்து கேட் அருகே கொண்டு வந்து நிறுத்தினான். லோகனுக்கு மலேசியா பிறந்த ஊர். இங்கே வந்து குடியுரிமை பெற்று 20 வருடங்களுக்கு மேலாகிறது. சமீப வருடங்களாகதான் இந்த மனப்பிளவு எல்லாம். அழுத்தத்தின் உச்சத்தில் எண்ணங்கள் அலை அலையாய் பெருகும்போது இப்படி ஏற்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். விரைவில் தன்னிலை எய்திடுவார் என்றாலும் விஷயம் தெரியாதவர் யாராவது சமாதானம் செய்யும்போது பிரச்சினை ஆகிவிடுவதுண்டு. நீண்ட வருடங்கள் பணிபுரிவதால் நீக்காமல் அப்படியே தொடர விட்டது நிர்வாகம். தொந்திரவென்றால் இது ஒன்றுதான். பார்க்க முரட்டு தோற்றம் உடைய ஆள், இயல்பில் பரமசாது. ஒருமுறை முதுகுப் பையில் பொருட்கள் நிரப்பி களவாடி ஓடியவனை ஓர் எட்டில் ஓடிப்பிடித்து வாத்தை தூக்குவது போல கழுத்தைப்பிடித்து இழுத்து வந்ததை நெடுநாட்களாக செக்யூரிட்டி வட்டத்துக்குள் சாதனையாக பேசிக்கொண்டிருந்தனர்.

முத்தையாவிடம் "பாத்துக்குங்க" என்று சொல்லி கிளம்பினான் சலீம்

"அவங்கிட்டயிருந்து எங்களத்தான் நீபாத்துக்கணும்" என்று முனகினார் முத்தையா.

சலீமின் முகம் வெறுப்பின் முகமாக இருந்தது. இந்த விதம் முகத்தை வைத்திருப்பதால் முன்பொரு காலத்தில் ஏதேனும் அனுகூலம் கிடைத்திருக்கும் என்று நம்பினான். பிறகு அதைத் தொடர்ந்திருக்கிறான். பிற்பாடு அதுவே அவன் முகமாகிவிட்டிருந்தது. முகம்தானே அப்படி ஒழிய குணத்தில் அப்படி அல்ல என அவனிடம் பழகியவர்களுக்கு புரியும். துரதிருஷ்டவசமாக அப்படி யாரும் அவனைச் சுற்றி இல்லை. அவன் தேடக்கூடிய பண்புகள் எவரிடமும் காணாதது கூட காரணமாக இருக்கலாம். கடுமையாக உழைக்கக் கூடியவனை இந்தக்காலத்தில் பிழைக்கத் தெரியாதவன் என்றுதானே சொல்கிறார்கள். அப்படி ஒரு பிழைக்கத் தெரியாதவன் என்றுதான் அவனைப்பற்றி சக ஊழியர்கள் பேசுவார்கள். ஆனால் பணம்

பண்ணுவதற்கான எல்லா வழிகளையும் அவன் அறிந்திருந்தான். லோகன் ஓர் ஆள்தான் சலீமுக்கு சகலமும்.

சலீம் அதிகம் பேசுவதில்லை. அவனுக்குள்ளே இருக்கும் தாழ்வுணர்ச்சி காரணம் இல்லை என்பது நன்றாகவே தெரியும். தனக்கு வாழ்வதற்கான தன்னம்பிக்கை மிகுந்திருக்கிறதாகவே எண்ணினான் என்றாலும் அவன் அதிகம் பேசுவதில்லை. அகன்ற தாடை அமைப்பு தன் பாட்டனார் வழியில் தந்தைக்குப் பிறகு அவனுக்கும் வாய்த்திருந்தது. அதுதான் முக்கிய பிரச்சினை. உடலை விட்டு தனித்துத் தெரியும் பெரிய தலைகொண்ட முகம். நான்கு கண்கள் அளவுக்கு இருக்கும் இரண்டு கண்கள். குறைவான உயரமும் அதிகமான உடலும் காரணமா என்றால் அதுவுமில்லை. இயற்கையிலே அமைந்த பல் அமைப்பும் தாடையும் அவன் என்ன பேசினாலும் எதிராள் இரண்டாவது முறை மீண்டும் கேட்டாக வேண்டும் என்ற குரல் ஒலிச்சிக்கல்தான் காரணம். சொன்ன வார்த்தைகளையே மீண்டும் மீண்டும் சொல்லிக் கொண்டிருந்து சலித்துவிட்டுத்தான் அவன் பேசுவதைக் குறைத்துக்கொண்டான். உள்ளுக்குள்ளிருந்து எழும் உணர்வு வார்த்தையாக வெளிப்படும்போது தெளிவற்றதாக ஆகிவிடுவதுதான் அவனது பிரச்சினையாக இருந்தது.

சிலர் நகைத்துவிடும்போது கோபம் வரும். பிறகு பழகிவிட்டது. வாயைத் திறக்காமலே சைகையால் பெரும்பாலும் செய்வதுண்டு. அவனது பெரிய கண்கள் அதற்கு உதவியாய் இருந்தது.

வேலையிடத்திலே சலீமுக்கு ஒரு பட்டப்பெயர் உண்டு. “டொட்டொ டொய்ங்” என்பதுதான் அந்த திருநாமம். சலீம் முன்னிலையில் எவரும் உபயோகிப்பதில்லை. சிலர் அதையும் சுருக்கி டோடோ என்று கிசுகிசுத்துக் கொள்வார்கள். டோட்டோ நம்பர் எடுக்க எல்லா செக்ஷனிலிருந்தும் இவனைத்தான் அனுப்புவார்கள். இந்த டோட்டோ சரித்திரத்தில் இவனுக்குத்தவிர எல்லாருக்கும் நம்பர் விழுந்திருக்கிறது. டோட்டோ டொய்ங் என எல்லோரும் கிண்டல் செய்வது தெரிந்த ஒருநாளில் நம்பர் எடுப்பதையும் எடுத்துக்குடுப்பதையும் நிறுத்திவிட்டான்.

பனிரெண்டு வருடம் முன்பு நிக்காஹ் நடந்தபோது அவன் உருவம் இப்படி இல்லை. சமீபமாக நான்கைந்து வருடமாகத்தான் உடல் பருமனாக ஆரம்பித்தது. சாயங்கால நடை, லேசான உடற்பயிற்சி, ஓட்டம் உணவுக்கட்டுப்பாடு, என எந்த உபாயங்களுமே அவனுக்கு

உதவவில்லை. ஆனால் மேலும் அதிகரிக்காமல் இருக்க உதவியது. இப்போது அதே பருமனான உருவம் தேங்கிவிட்டிருந்தது.

மனைவியும் ஒரு பெண்பிள்ளையும் கொட்டாம்பட்டி-பாலக்குறிச்சியில் இருக்கிறார்கள். பெண்பிள்ளைக்கு வயது பத்தாகிறது. பிறப்பிலேயே மந்தம். எல்லா சிகிச்சையும் முயற்சித்தாயிற்று. இவனுக்காவது கொஞ்ச வயதுவரை பேச்சு நன்றாக இருந்தது. பிள்ளைக்கு பிறந்ததில் இருந்தே சிறிய கோளாறுகள் இருந்தது. வளர வளர பேச்சும், வளர்ச்சியும் மட்டும் வளரவில்லை. எதைச் சொல்வதாக இருந்தாலும் “திக்கா, திக்கா” என்பாள். எதுவும் புரியாது. பள்ளிக்கூடம் அனுப்ப முடியவில்லை பிறந்த முதல் மூன்று வருடம் சிங்கப்பூரில்தான் குடும்பம் இருந்தது. அப்போது பூன்லேயில் குடியிருந்தார்கள். தூரத்து சொந்தம் ஒருவரின் வீட்டைப் பகிர்ந்து உள் குடித்தனம் இருந்தான். அவர்கள் வீட்டிலும் இருபிள்ளைகள் இருந்தது. விவரம் அறிந்த பின்னரும் கூட பீ மூத்திரம் வீட்டிலேயே போய் விடுவதைச் சொல்லியும், அவ்வீட்டில் தன் பிள்ளை வளர்ச்சி குறித்த கேலி கிண்டலும் அதிகமானபோதுதான் மனைவி பிள்ளையை ஊருக்கு அனுப்பிவிட தீர்மானம் எடுத்திருந்தான். இவன் சம்பளத்திற்கு தனி வீடு

வாடகைக்கு எடுப்பது என்பது அதிகம் செலவு பிடிக்கும் காரியம் என்பதால் குடும்பத்தை ஊருக்கு அனுப்பிவிட்டு இவன் மட்டும் தனித்திருந்தான்.

சலீமின் தந்தையார் மறைந்தபோது குடும்பத்தில் மொத்தம் எட்டு உருப்படிகள். எஞ்சியிருப்பது ஆறு பேர். மூன்று தங்கைகளை கட்டிக்கொடுத்த வகையிலும் இரண்டு இளைய சகோதரன்கள் படித்த வகையிலும் வாங்கிய கடன்கள் அனைத்தும் சலீமின் தலையில் விழுந்தபோது பெரிய புகாரொன்றும் சொல்லாமல் ஏற்றுக்கொண்டான். ஜமாத்தில் கூப்பிட்டு கடனை சமமாகப் பிரித்துக் குடுப்பதாக சொன்னார்கள். சின்னப் பிள்ளைங்க, இன்னும் சம்பாதிக்கவே ஆரம்பிக்கல. அதுங்க தலையில ஏன் பாரம். நானே ஏத்துக்கறேன் என்று சொல்லிவிட்டான். சலீமின் அப்பாவான மொகைதீன் பாய்க்கு சொந்தத்தில் நிலம் இருந்தது. அதன் பேரில்தான் கடன் அனைத்தும் உள்ளது. அவனின் சிறு வயதில் கடலை பயிரிட்டிருக்கிறார்கள். களத்திலிருந்து நிலக்கடலை மூட்டைகளை மாட்டு வண்டியில் ஏற்றி சிங்கம்புணரி மில்லுக்கு இவனும் சென்றிருக்கிறான். அந்த நிலத்தை விற்று கடன்களை அடைக்கலாம், ஆனால் அதில் சலீமுக்கு

விருப்பமில்லை. நிலத்தின் அன்றைய மதிப்பிலான பணத்திற்கு சரிசமமாக தங்கைகளுக்கு தங்கச்சங்கிலி கொடுத்தான். தம்பிகளுக்கு ரொக்கப்பணம். நிலத்தை தன் பெயருக்கு மாற்றிக்கொண்டான். பிற்காலத்தில் ஊர் திரும்பும்போது விவசாயம் செய்வதுதான் அவனின் விருப்பமாக இருந்தது. உள்ள கடன்கள் அனைத்தையும் அடைக்க வேண்டும். நிலத்தில் ஒரு கிணறு வெட்ட வேண்டும். அதற்கு குறைந்தது பத்தாண்டு கால உழைப்பு தேவைப்படும். அந்த பத்தாண்டு காலத்தில்தான் சலீம் வாழ்ந்து கொண்டிருக்கிறான்.

உடல் பருத்த பின்பு அவனின் முக்கிய பிரச்சினையாக இருந்தது குறட்டை. ஆரம்பத்தில் எக்சல் சூப்பர் இஞ்சினிலிருந்து கசிந்து வருவது போல இருந்தது பிறகு, அது என்ஃபீல்டு சத்தமாக மாறி இப்போது ஹெலிகாப்டர் அளவுக்கு உயர்ந்துவிட்டிருந்தது. வாடகையைப் பகிர்ந்துகொள்ளும் பேச்சிலர் அறைகளிலிருந்து இதே காரணத்தால் பத்துக்கும் மேற்பட்ட அறைகளை மாற்றிவிட்டான்.

இப்போது தனியறை. வாடகை அதிகம்தான் என்றாலும் வேறு வழியில்லை. அதை ஈடுகட்ட நைட் ஷிப்ட் மட்டும் போக ஆரம்பித்தார்.

பகல் ஷிப்ட் பார்ப்பவர்களைக் காட்டிலும் இரவு நேரத்தில் பார்ப்பவர்களுக்கு முந்நூறு வெள்ளி அதிக ஊதியம்தான் அதைத் தேர்ந்தெடுக்க காரணம்.

பகலில் தூங்குவது முதலில் அவனுக்கு சிரமமாக இருந்தது. அவனுடன் நைட் ஷிப்டில் வேலை செய்யும் முத்தையா அண்ணன் சாப்பாடு மடிக்கும் வேலைக்கு அழைத்துச் சென்றார். ஒரு மணி நேரத்திற்கு பத்து வெள்ளி கணக்கு. காலை ஷிப்ட் வேலை முடிந்ததும் முத்தையா அண்ணனோடு கேட்டரிங் ஒன்றிற்கு சாப்பாடு மடிக்கச் செல்வது வழக்கமானது. மூன்று மணி நேரத்தில் இருநூறு சாப்பாடு மடிக்க வேண்டும். பத்து எலெக்ட்ரிக் குக்கர்களில் வரிசையாக சோறு வெந்து கொண்டிருக்கும். முதல் குக்கரில் வெந்ததை எடுத்துக்கொட்டி கட்டிக்கொண்டே போய் பத்தாவது குக்கரில் முடித்தால் முதல் குக்கரில் சோறு வெந்திருக்கும். கொதிக்கக் கொதிக்க சோற்றை பேப்பரில் கட்டி மடக்கி ரப்பர் பேண்ட் இட்டு அடுக்கி வைக்க வேண்டும். கைகள் பழுத்துப் போகிற வேலை. முதல் ஓரிரு நாட்களில் கைகளில் கொப்புளம் அள்ளிப்போட்டது. பிறகு அதுவே காய்த்து மரத்துப் போனது. வேலை முடிந்ததும் உடனே மூன்று மணி நேரத்திற்கான சம்பளம் முப்பது

வெள்ளியைப் பார்த்ததும் அத்தனை கஷ்டங்களும் மறந்து போனது அவனுக்கு. கூடுதலாக ஒருவேளை சாப்பாட்டை அங்கேயே முடித்துக் கொள்ளலாம். வெளியே ஒருவேளை சாப்பாட்டுக்கு குறைந்தது மூன்று வெள்ளி ஆகும். முப்பது நாளில் தொன்னூறு வெள்ளி மிச்சம் பிடிக்கலாம் என்பது கூடுதல் சகாயமாக தெரிந்தது.

கேட்டரிங் முடிந்து அறை திரும்பும்போதுதான் மணி எக்சேஞ்ச் வைத்திருக்கும் ஜாகீர்உசேன் அண்ணன் பழக்கமானார். பணமதிப்பு விவரங்கள் பார்க்கப் போய் பழக்கமாகியது. பேச்சின் நடுவே ஜாகீர் உசேன் சில ஏவல் பணிகளைச் சொல்வார். பக்கத்திலிருக்கும் வேறொரு கடைக்கு பணம் கொடுத்தனுப்புவது, வரும்போது சாப்பாடு வாங்கி வருவது, காடி கூப்பன் வாங்க என அனுப்ப ஆரம்பித்தார். இவனும் மனமுவந்துதான் செய்தான் பின்னாளில் சலிப்பு தோன்றியதும் போய்வர சுணக்கம் காட்டினான்.

சலீம்பாய் நீ ஒண்ணும் சும்மா போய் வரேண்டாம் பாத்துக்க. ஒரு சாப்பாட்டுக்கு ஒருவெள்ளி கமிசன் எடுத்துக்க. எந்தக்கடை சாப்பாடா

இருந்தாலும் கைக்காச போட்டு வாங்கிட்டு வா. இங்க அஞ்சு பேர் இருக்கோம். அஞ்சு சாப்பாடு. பக்கத்துக் கடைகள்ல சொல்றேன். எல்லாருமே போய் வாங்கிவர நேரமில்லாமதான் வேலை பாத்துகிட்டு இருக்கோம். வரிசையா இருக்கற கடைகள்ல எல்லாருக்கும் இதே நெலமதான். ரெண்டு மணிநேர வேலதான். கொஞ்சம் காசு நிக்கும் என்னா சொல்ற என்றார்.

ஆர்டரை போனில் மெசேஜ் அனுப்பி விடுவார்கள் எந்தக்கடையில் வாங்கணும் என்பது குறிப்பிட்டிருக்கும். போய் வாங்கிக்கொடுத்தால் சாப்பாட்டுக்கு ஒருவெள்ளி. சாந்தி விலாஸ், முத்துஸ் கறி, மதர் ரெஸ்டாரண்ட், முத்தையா ஹோட்டல், காந்தி சாப்பாட்டுக்கடை, செட்டிவிலாஸ் என ஐந்து கிலோமீட்டர் சுற்றளவுக்குள்தான் எல்லாக்கடைகளும் இருந்தன. முதலில் ஐந்து பத்து எனப் போய்க்கொண்டிருந்தது. இப்போது சராசரியாக ஐம்பது சாப்பாடு ஆர்டர் என்றாகிவிட்டது. கடைகளுக்குப் போய் வர எலெக்ட்ரிக் சைக்கிள் ஒன்றை வாங்கிக்கொண்டான் சலீம். பின்னால் பெரிய பாக்ஸ் வைத்த சைக்கிள். இதில் நல்ல வருமானம் கிடைத்தது அவனுக்கு. மொத்தமாக இரண்டு மணி நேர வேலை. பணம் எல்லாவற்றையும் மறக்கச் செய்தது.

அன்று ஒட்டுக்கடை சுப்பையா தேக்காமாலில் உள்ள சாப்பாட்டுக்கடை மீன் குழம்பும் சோறும் வாங்கி வரச்சொல்லியிருந்தார். உள்ளே மதிய நேரத்தில் கூச்சலும் இரைச்சலுமாய் இருந்தது. கிடைக்கும் சந்துகளில் உள்ளே போய் வாங்கி வர பதினைந்து நிமிடங்களாவது ஆகிறது. அக்குறிப்பிட்ட கடை கொஞ்சம் பிரபல்யமானது. வரிசையில் நின்றுதான் வாங்க வேண்டும். இந்தக்கடை ஆகாது என்று சொல்லிவிட வேண்டும் என்று மனதுக்குள் நினைத்துக் கொண்டு ஏழாவது ஆளாகப் போய் வரிசையில் நின்று கொண்டான்.

ஒரு பெண்மணி இயந்திரம் போல குழம்பை பிளாஸ்டிக் பையில் இட்டு கட்டிக்கொண்டிருந்தாள். மீன்தான் இந்தக்கடையின் சிறப்பு போல. மீன்கள் பொன்னிறத்தில் வறுத்து அழகாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன.

இவன்முறை வந்ததும் வேண்டியதைச் சொல்லி வாங்கிக்கொண்டான். வந்ததற்குப் பிறகு கூட்டம் அதிகமாயிருந்தது. பின்புறமும் அப்படியே. இடதுபுறம் திரும்பி லோடு இறக்கும் வழியாச் சென்றால் பஃபலோ

ரோடை எளிதில் எட்டிவிடலாம் என்ற கணக்கைப் போட்டபடி யார்மீதும் இடித்துவிடாமல் இருக்க சற்றே நெஞ்சுக்கு மேல் ப்ளாஸ்டிக் பையைத் தூக்கியபடி நடந்துகொண்டிருந்தான். நான்கைந்து டேபிள் தாண்டியபோது பையிலிருந்த குழம்பு பாக்கெட் சொத்தென டேபிளில் விழுந்து வெடித்துச்சிதறி சாப்பிட்டுக்கொண்டிருந்த பெண்ணின் முகத்தில் அடித்தது.

யாரும் எதிர்பார்க்கவில்லை. மொத்தக் குழம்பும் நேரே முகத்தில் அப்பியிருந்தது. கண் எரிச்சலில் அப்பெண் ஓலமிட்டு அழத்தொடங்கினாள். சிலர் டிஷ்யூ பேப்பரை நீட்டினார்கள். பாட்டிலிலிருந்து தண்ணீரை எடுத்து முகத்தைத் துடைத்து விட்டார்கள். கண்களில் மசாலா நன்கு இறங்கி விட்டிருந்தது. ஓலத்தை நிறுத்தாமல் கத்திக்கொண்டே இருந்தாள். முன்பைவிட அதிகமான சப்தத்தால் நடுங்கிவிட்டான் சலீம். தண்ணிக்கடையில் கொஞ்சம் ஐஸ் கேட்டு வாங்கி அவள் கைகளில் வைத்தான். யாரோ ஒருத்தர் ஆசுபத்திரிக்கு கூப்பிட்டுப் போகச் சொன்னார்கள். ஆம்புலன்சுக்கு போன் பண்ணச் சொன்னார்கள். எல்லோரும் சலீமைக் கடிந்துகொண்டார்கள். அவன் பயந்து போயிருந்தான்.

சலீம் மெதுவாக அப்பெண்ணின் கைப்பிடித்து வாஷ்பேசின் அருகே அழைத்துச் சென்று தண்ணீரை தடம் காட்டினான். அழுதுகொண்டே கழுவ ஆரம்பித்தாள். கண்ணிலிருந்து கண்ணீர் கசிந்துகொண்டே இருந்தது.

“நான் வேணா ஒரு டாக்சி புடிச்சி கேகே ஆஸ்பிட்டலுக்கு கூட்டிட்டு போகவா?” என்றான்.

துப்பட்டாவால் கண்ணைப் பொத்திக்கொண்டாள். இருவரும் அருகில் இருந்த மருத்துவமனைக்குள் நுழைந்தனர்.

அவள் போட்ட கூச்சலில் அவசர சிகிச்சைப் பகுதியில் சேர்த்திருந்தார்கள்.

எக்சேஞ்சுக்கு போன் அடித்து விஷயத்தை சொன்னான். சாப்பாடு இப்ப வராது. நாளைக்கு பாத்துக்கலாம் எனச்சொல்லி வைத்துவிட்டான். சுப்பையாவுக்கு சொல்லவேண்டும். அந்த ஆளால்தான் இத்தனையும்

என்று மனதிலிருந்து வசவொன்றை வசீயபடி அவருக்கும் அடித்து விஷயத்தை சொன்னான்.

டாக்சியில் வரும்போதே அவளின் கைப்பையை இவனிடம் கொடுத்துவிட்டிருந்தாள். உள்ளே துழாவி அவளின் ஒர்க் பர்மிட் அட்டையைக் கொடுத்தான். அட்மிஷன் கவுண்டரில் குறித்துக் கொண்டனர்.

ஆனந்தி, இலங்கைத் தமிழ்ப்பெண்.

மிக நீண்ட நாட்களுக்கு முன்பு எழுதப்பட்டிருந்த கடிதம் ஒன்று நான்காய் மடித்து அவள் கைப்பையினுள் இருந்தது. செவிலியர் எதையோ கேட்க இவன் அவளின் கைப்பையினுள் துழாவிய போது அகப்பட்டது. தேடியது கிடைத்ததும் எடுத்துக் கொடுத்தான். எதார்த்தமாக அந்தக்கடிதத்தைப் பிரித்துப் பார்த்தான். யாருக்கோ எழுதிய கடிதம் எதற்கு நாம் படிப்பது நாகரீகமல்ல என்று நினைத்து இருந்தபடியே மடித்து வைக்கும் முன்பு முதல் இரண்டு வரிகளைப்

படித்துவிட்டான். ஆர்வம் மேலிட இருபக்கமும் பார்வையைச் சுழல விட்டான். யாரும் கவனிக்கவில்லை.

இந்தக்கடிதம் உங்களுக்கு கிடைக்கும்போது நான் உயிருடன் இருக்க மாட்டேன். என் சாவுக்கு காரணம் சரவணன் என்பவர். நான் உழைத்து சம்பாதித்த பணத்தை அவரிடம் கொடுத்தேன். அவர் திரும்பத் தருவதாயில்லை. என் எதிர்காலமே அதை நம்பித்தான் உள்ளது. பணம் கொடுத்ததற்கான சாட்சி எதுவும் இல்லை என்பதால் புகாரும் செய்ய முடியாது. ஒருவேளை நான் இறந்த பிறகு அவரிடம் பணம் திரும்பப் பெறமுடிந்தால் இந்த முகவரிக்கு அனுப்பி விடவும் என்று எழுதி கீழே இலங்கை விலாசம் இருந்தது. மடித்து பாக்கெட்டில் வைத்துக்கொண்டான்.

மூன்று நாள் ஓய்வில் இருக்கவேண்டும் எனவும் வீட்டுக்குப் போகலாம் எனவும் சொன்னபோதுதான் கொஞ்சம் நிம்மதியடைந்திருந்தான்.

வெளியே வந்தவள் கொஞ்சம் சாந்தமாகியிருந்தாள்.

“தெரியாமல் விழுந்து விட்டது என்பதையே வெவ்வேறு வார்த்தைகள் போட்டுக் குழப்பிச் சொன்னான்”

பரவால்ல விடுங்க. இதைவிட நிறைய வலிகளை கடந்து வந்திருப்பவளைப் போல சலித்தபடி சொன்னாள்.

அவனுக்கு கொஞ்சம் ஆறுதலாக இருந்தது.

எங்கே போகணும்? சொல்லுங்க நான் விட்டுட்டு வரேன் என்றான்.

வாம்போ ட்ரைவ் போகணும். அங்கதான் ஒருவீட்ல வேலை செய்றேன். என்றாள்.

டாக்சியிலிருந்து இறங்கும்போது தன் போன் நம்பரை குறித்துக்கொள்ளச் சொல்லிவிட்டு எவ்வளவு மறுத்தும் இருநூறு வெள்ளி பணத்தையும் கையில் திணித்தான் சலீம். அவள் மறுத்துவிட்டு அவனிடமே திருப்பி அளித்தாள். விடாப்பிடியாக அவளது கைப்பையில் வைத்து விட்டான்.

வீட்டுக்காரங்க ஜப்பான் போயிருக்காங்க. வயசான சீனத்தம்பதி. வர ரெண்டு நாள் ஆகும். சும்மா இருந்து போர் அடிச்சதால தேக்கா வந்து சாப்டுட்டு வரலாம்னு வந்தபோதுதான் இப்படி ஆச்சு.

நான் வேணா வீடு வரைக்கும் வந்து விட்டுட்டு வரட்டுமா? என்றான்

வேணாம்… உங்க பேர் என்ன சொன்னிங்க?

சலீம்.

வேணாங்க சலீம். அக்கம் பக்கம் எல்லாம் தெரிஞ்சவங்க. தப்பா எதாச்சும் சொல்லிவிட்டுட்டாங்கன்னா வேலைக்குப் பிரச்சினை ஆகிடும். மொதலாளி பிள்ளைங்க கேமரா செட் பண்ணி வச்சிருக்காங்க. நான் தனியா போய்க்குவேன். பிரச்சினையில்லை என்றாள்.

அன்றிரவே உணவு இடைவேளையின்போது லோகனிடம் நடந்த அசம்பாவிதத்தைப் பகிர்ந்து கொண்டான்.

பொறுமையாகக் கேட்டுக்கொண்டிருந்தவன் முடித்ததும் கண்ணடித்தபடி ஆள் எப்புடி இருப்பா? நாட்டுக்கட்டையா என்றான்.

உங்கிட்ட சொன்னம் பாரு, சரி கெளம்பரேன். கர்நாடகா பொன்னி அரிசி லோடு வந்துருக்கறதா சூப்பர்வைசர் சொன்னான். அன்லோடு பண்ணி எடுத்து அடுக்கணும் இன்னிக்கு பெண்டு கழண்டுடும். உன்னமாரி பொம்ம வாசல்ல நிக்குறதப்போல நிக்கற வேல இல்ல.

செக்ஷனுக்குப் போகும்போதுதான் அவளைப்பற்றி யோசித்தான். அடர்த்தியான சுருட்டை முடி, வட்ட முகம். தீற்றலாக பொட்டு இருந்த நினைவு. அகன்று பருத்து நிமிர்ந்த மார்புகள். கொஞ்சம் குண்டுதான். ஆனால் என்னளவு குண்டு இல்லை. அட்டையில் இருந்த பிறந்த தேதி உண்மையாக இருக்கும்பட்சத்தில் முப்பத்தியேழு வயது இருக்கலாம். நாம் ஏன் அவளைப்பற்றி யோசிக்கிறோம் என்று தன்னையே கடித்துகொண்டபடி செக்ஷனை அடைந்தான்.

ஒருவாரம் கழித்து அவளிடமிருந்து போன் வந்தது. நேரில் கேட்டதை விட போனில் குரல் இனிமையாக இருப்பதைப் போன்று தோன்றியது. சாப்பாட்டு இடைவெளியான ஒருமணி நேரமும் பேசியே தீர்த்தான். அவளின் மொத்தக் கதையுமே வாத்தியார் முன்பு ஒப்பிப்பது போல ஒப்பித்துக் கொண்டிருந்தாள். முதலில் சுவாரசியம் இல்லாமல் கேட்டுகொண்டிருந்தவன் அவள் கடந்து வந்த பாதை அறிந்ததும் பரிவுடன் கேட்க ஆரம்பித்திருந்தான்.

தேயிலை எஸ்டேட்டில் கங்காணியாக இருந்தவர் அப்பா. சிறுவயதில் மிக வசதியான பங்களாவில் வாழ்ந்தவள். அப்பா இறந்த பின்னர் குடும்பம் நொடித்தது. முதலாளி போன்று வாழ்ந்த அதே எஸ்டேட்டில் தேயிலை பறிக்கும் வேலை அம்மாவுக்கு வந்தது. வளர்ந்து கல்யாணம் முடித்த ஒரே மாதத்தில் காணாமல் போன கணவன் இறந்த செய்தி மட்டுமே பின்பு வந்தது. செய்தி வந்தபோது இவளுக்கு மூன்று மாத கர்ப்பம். உடல் வடீு வந்து சேராமலே இராணுவத்தால் எரிக்கப்பட்டது என இயக்கத்து ஆள் வந்து சொன்னபோதுதான் நம்பினேன் என்றாள். போர் உச்சகட்டம் அடையும்போது தாயும் பிள்ளையுமாக கொழும்பு ஏஜண்டை நம்பி

ஆஸ்திரேலியாவுக்கு படகில் ஏறியது. படகு இந்தோனேசியா அடைந்ததும் எல்லோரையும் விட்டுவிட்டு ஏஜண்ட் ஓட்டம் பிடித்தது. பிறகு அங்கிருந்த ஒரு பெரிய மனிதரின் கருணையால் நாடு திரும்பியது. பிள்ளையை அம்மாவின் பாதுகாப்பில் விட்டுவிட்டு தான் இங்கே வீட்டு வேலை செய்வது என அத்தனையும் அவனிடம் சொன்னாள்.

நான் ஏன் இதெல்லாம் சொல்லணும்னு ஒங்களுக்குத் தோணும். இவ்வளவு கஷ்டப்பட்டு பிள்ளையின் எதிர்காலத்துக்காக கொஞ்சம் காசு சேத்து வச்சிருந்தேன். பிள்ளையோடு படிப்புக்கும் வாழ்க்கைக்கும் தேவைப்படுமேன்னு பாத்து பாத்து சேமிச்சது. அதை ஒருத்தர்கிட்ட கொடுத்தேன். அவர் நல்லவர்தான் ஆனா திருப்பித் தரவே மாட்டேங்கறார். இப்போ ஆள் எங்க இருக்கான்னு கூட தெரியல. எப்படியாச்சும் அந்தக்காசு வந்துச்சுன்னா ஊருக்குப் போயிடுவேன். அடுத்த மாசம் பர்மிட் முடியுது. புதுப்பிக்க தேவையில்லன்னு முடிவு பண்ணியிருக்கறதா சொல்றாங்க. வேற வீடுகள்ல வேலை கிடைக்கும். ஆனா விருப்பமில்ல. கொஞ்ச நாள் முன்ன பாத்ரூம்ல வழுக்கி விழுந்த தொடை சப்பையில் நல்ல அடி.

ஸ்கேன் எல்லாம் எடுத்துப் பாத்துட்டு படியேறக்கூடாது, ரொம்ப நடக்கக் கூடாதுன்னு சொல்லிட்டாங்க. நாட்டுக்குத் திரும்பி பிள்ளையோட வாழணும், சின்னதா ஒரு தையல் கடை வச்சு பிழச்சுக்கலாம்னு நினைக்கிறேன். எப்படியாவது அந்தப் பணத்தை திரும்ப வாங்க உதவி செய்ய முடியுமா?

தெரியாத ஊர்ல யாராச்சும் பெரிய தொகைய கடனா குடுப்பாங்களா? எவ்வளவு கஷ்டப்பட்டு சேத்திருப்பிங்கன்னு உணர முடியுது.

”அந்த லெட்டரை நான் படிச்சேன்” காசு எப்பவேணா சம்பாதிச்சிக்கலாம். உயிர் போனா வராது. என்றான்.

எதிர்முனையில் சலனமே இல்லை.

“அந்த லெட்டர் ஆறுமாசத்துக்கு முந்தி எழுதினது”. ஒரு வேகத்துல எழுதிட்டேன். சாக மனசு வரல. பிள்ளை முகம் முன்னாடி வந்து அம்மான்னு கூப்பிடற மாதிரி ஒரு நினைவு வந்து தடுத்திடுது.

தினமும் எடுத்துப் பாத்து மூடி வச்சிருவேன். தற்கொலை பண்ணிக்கற தைரியம் எனக்கில்ல.

அவர் நல்லவர்தாங்க. ஹாக்கர் செண்டர்ல தோசக்கடை வச்சிருந்தார். லோக்கல் ஆளுதான். கொஞ்சம் வயசானவர். போகும்போதும் வரும்போதும் பழக்கம். ஏமாத்துவார்னு நினைச்சு குடுக்கலை. ஒருநாள் அம்மா செத்துட்டாங்க, அடக்கம் பண்ண காசு இல்லன்னு கைய புடிச்சிகிட்டு அழுதார். போட்ருந்த நகை, கொஞ்சம் பணம் எல்லாத்தையும் குடுத்தேன். ஒரே மாசத்துல தர்றேன்னு சொல்லிட்டுப் போனவர்தான். கடையையும் திரும்ப தொறக்கவேல்ல. ஒரு வருஷமே முடிஞ்சு போச்சு. அவர் போன் நம்பர் மட்டுந்தான் என்கிட்ட இருக்கு. மத்த எந்த விவரமும் தெரியாது.

சரி குடுங்க நான் எதாச்சும் கண்டுபுடிக்க முடியுதான்னு பாக்கலாம்.

அடுத்த வாரம் அவனின் அறைக்கு அவளே வந்திருந்தாள். தனியறை. கலைந்து கிடந்திருந்தது. கட்டிலைத் தவிர அமர்வதற்கு

வேறிடமில்லை. தரையில்தான் அமரவேண்டும். அவளை அமரச்சொல்லிவிட்டு இவன் நின்றுகொண்டான். அவள் பார்வையை அறை முழுக்க சுழல விட்டாள். ஊறுகாய் பாட்டில் திறந்திருந்தது. டெலிபோன் வயர் கொடியில் துணிகள் தொங்கிக்கொண்டிருந்தது. சாப்பாட்டுக் கழிவுகள் ப்ளாஸ்டிக் பையில் துர்நாற்றமடித்தபடி மூலையில் இருந்தது. ஒரு மாதமாக கூட்டிப்பெருக்காத அறைபோல இருந்தது.

இங்கே இருங்க குடிக்க எதாச்சும் வாங்கிட்டு வரேன் என்று கீழே இறங்கி ஓடினான்.

அவன் அறை திரும்பியபோது எல்லாவற்றையும் கூட்டிப்பெருக்கி சுத்தமாக்கியிருந்தாள். போர்வை மடித்து அதனதன் இடத்தில் நேர்த்தியாக இருந்தது. டேபிளை துடைத்து பொருட்களை ஒழுங்காக அடுக்கி வைக்கப்பட்டிருந்தது. துணிகள் குவியலாய் போட்டு ஒவ்வொன்றாக மடித்து வைக்கும்போதுதான் அவன் திரும்பியிருந்தான்.

ஏன் இதெல்லாம் நீங்க செஞ்சிட்டு இருக்கிங்க என்று லேசாக கடிந்துகொண்டான்.

என் வேலையே இதான. இடம் ஒழுங்கில்லன்னா கை தானாவே ஒழுங்கு செய்ய ஆரம்பிச்சிடுது. ஏழெட்டு வருஷ பழக்கம். அதான் செய்ய ஆரம்பிச்சிட்டேன் என்றாள்.

கப்பில் டீ ஊற்றி இருவரும் குடித்தார்கள். கிளம்பும்போது சரவணன் விவகாரம் குறித்து கேட்டாள். சொல்லியிருக்கிறேன். கண்டுபிடிச்சிடலாம் என்றான்.

அவள் சென்ற பிறகும் அவள் விட்டுச்சென்ற எதோ ஒன்று அறையில் சுழன்றுகொண்டே இருப்பதாக உணர்ந்தான். யோசித்தபடி திரும்பி டேபிளில் பார்த்தான். டீ கப்பின் அடியில் நான்கு ஐம்பது வெள்ளி நோட்டுகள் இருந்தது. அவள் சொன்ன ஆள் குறித்து யாரிடம் கேட்கலாம் என்று யோசிக்க ஆரம்பித்தான்.

லோகன் இதற்கு சரியான ஆள். அவனுக்கு இதுபோன்ற விஷயங்கள் செய்து கொடுக்க ஆள் இருந்தார்கள். போன் நம்பரை வைத்து ஆளைக் கண்டுபிடிப்பதெல்லாம் எவ்வளவு தூரம் சாத்தியம் என்பது தெரியவில்லை. ஆனால் எதாவது ஒரு விதத்தில் அவளுக்கு உதவிட மனது துடித்தது. ஆனால் லோகன் வேறுவிதத்தில் கிண்டல் செய்யக்கூடும்.

லோகனிடம் விஷயத்தை சொன்னபோது நமுட்டுச் சிரிப்போடு சிரிலங்காக்காரி கவுத்துப்புட்டாளா ஒன்ன என்றான்.

அத விடு, எப்டியாச்சும் எனக்கு நீ ஒதவி செய். பாவம். வாழ்க்கைல ரொம்ப கஷ்டப்பட்டுருக்கு அந்தப் பொண்ணு.

“யாரு லா கஷ்டப்படல வாழ்க்கைல, என் கத ஒனக்கு தெரியுந்தான.”

அதெல்லாம் இப்ப பேசவேணாம். இன்னும் கொஞ்ச நாள்ல அவ நாடு திரும்பறாளாம். அதுக்குள்ள எதாச்சும் செய்ய முடியுமா?

பேர் அட்ரஸ் சொல்லு பாக்கலாம் என்றான் லோகன்.

அட்ரஸ் தெரியாது, பேர் சரவணன். லோக்கல் ஆள்தான். வாம்போ ஹாக்கர் செண்டர்ல தோசக்கடை வச்சிருந்தானாம். நம்பரும் வேலை செய்யல.

சரி. எனக்கு ஒருவாரம் டைம் குடு. ஆளுங்கள வச்சி பாக்கலாம். என்றான்.

சலீம் சற்று நம்பிக்கையோடு மறுநாள் அவளுக்கு போன் பண்ணி விஷயத்தைச் சொன்னான்.

வாங்கிக் குடுத்துட்டிங்கன்னா தெய்வம் மாதிரி வாழ்க்கை பூரா நினைச்சுக்குவேன் என்று கண்கலங்கினாள்.

ஊருக்குப் போக தயாராகிடுங்க. அதுக்குள்ள பேசி வாங்கித்தரேன். கவலைப்படவேணாம் என்று சொல்லி போனை வைத்தான்.

எந்தவகையில் தான் இப்படி நம்பிக்கை ஊட்டுகிறோம், ஒருவேளை பணம் வராமல் போனால் என்னாகும் என்று யோசிக்கத் தொடங்கினான்.

பத்துநாள் கழித்து லோகன் தகவலோடு வந்தான்.

“அந்தக்காச மறந்துடச் சொல்லு லா அவள” ஆளு உள்ள இருக்கான். பேங்கிரப்ட் கேசு. இவள மட்டும் இல்ல நெறையா பேர ஏமாத்திருக்கான். ரெண்டு வருசமாச்சும் ஆகும் வெளிய வர. என்றான்.

இப்படி முடியும் என்று சலீம் யோசித்திருக்கவில்லை.

மறுநாள் அவளே போன் பண்ணி நிலவரத்தைக் கேட்டாள்.

ஆளப் புடிச்சாச்சி, கேலாங்ல ஒரு சாப்பாட்டுக்கடையில வேலை செய்யறாராம். ரெண்டு நாள்ல செட்டில் பண்றேன்னு சொன்னார்.

அவள் குரல் நெகிழ்ந்து அழத்தொடங்கியது போல வார்த்தைகள் இவன் காதில் ஒலித்தது.

என்ன லா பேசற நீ? எவனோ வாங்கி ஏமாத்திட்டு போன காச நீ குடுக்கறன்னு சொல்ற? முட்டாப்பயலா நீ. அவ்ளோ பெரிய ரதியா அவ என்றான் லோகன். அவனிடம் கொஞ்சம் காசு கேட்டிருந்தான் சலீம்.

குடுப்பியா குடுக்க மாட்டியா? என்றதும் அரை மனதுடன் கேட்ட தொகையைக் கொடுத்தான். உடனே அந்தத் தொகையைப் புரட்டக் கூடிய சக்தி சலீமிடம் கிடையாது. அங்கும் இங்குமாய் கடன் வாங்கி. ஒரு ஐயாயிரம் வெள்ளியை புரட்டினான். ஒரு கவரில் போட்டு வைத்துக் கொண்டான். ஊருக்குப் போகையில் குடுத்துவிடலாம்.

நாளைக்கு டிக்கெட் போட்டு குடுத்துருக்காங்க. அதுக்குள்ள காசு கெடச்சுடுமா?. இல்லன்னா கூட விடுங்க, காசுல்லாம வாழமுடியாதா என்ன. ரெண்டு வருஷ முழு உழைப்பு அந்தக்காசு.

அத நெனச்சாதான் பொறுக்க முடியல. இவ்ளோ தூரம் எனக்காக நீங்க செஞ்சதே பெரிய விஷயம் என்றாள்.

நீங்க ஏர்போர்ட் போங்க நான் வேலை முடிச்சி நேரடியா அங்க வந்துடறேன் என்று சொல்லி போனை அணைத்து பாக்கெட்டில் போட்டுக்கொண்டான்.

ஊருக்குப் திரும்புபவர்களின் முகத்தில் ஒருவிதமான சந்தோஷக்களைப் படர்ந்துவிடும். முகம் கொள்ளாத சிரிப்புடன் கையசைத்துச் செல்வதை சலீமே பலமுறை அனுபவித்திருக்கிறான். அவள் முகத்தில் எவ்வித உணர்ச்சியும் தென்படவில்லை. ஒளிமிகுந்த கண்கள் மட்டும் தான் மகிழ்ச்சியாய் இருப்பதாகப் பாவனை காட்டியது.

சரவணன் பணத்தைக் குடுத்துட்டாருங்க என்று சொல்லியபடி பணம் அடங்கிய கவரை அவளிடம் கொடுத்தான் சலீம்.

அவளால் நம்பவே முடியவில்லை. திகைத்தபடி கவரை வாங்கி கண்களில் ஒற்றிக்கொண்டாள். கண்களில் கண்ணரீப்

பெருக்கெடுத்தது. அழுகையினூடே அவனைக் கட்டிப் பிடித்துக்கொண்டாள். சலீம் மறுப்பேதும் தெரிவிக்கவில்லை. அவனே அறியாவண்ணம் மெல்ல அவன் கன்னத்தில் முத்தமிட்டாள். காமத்தில் அடங்காத வகை முத்தம் அது.

போர்டிங் முடிச்சிட்டு ப்ளைட்ல உக்காந்துட்டேன்னு ஒரு போன் அடிங்க. நான் இங்கருந்து கெளம்பிடறேன் என்று சொல்லி அவளை வழியனுப்பி வைத்தான்.

இமிக்ரேஷன் முத்திரை பதிக்கும் இடம் தாண்டியதும் தூரத்தில் அவள் கையசைப்பது தெரிந்தது.

இவனும் கையசைத்தான்.

ரயில் பிடித்து வடீு திரும்பும்போது அவனுக்கு ஒரு குறுஞ்செய்தி வந்து விழுந்தது.

“நான் சரவணனுக்கு குடுத்தது நாலாயிரம் வெள்ளிதான்” நீங்கள் குடுத்த கவரில் ஐந்தாயிரம் வெள்ளி இருக்கிறது. இது உங்களுடைய பணம் என்று நினைக்கிறேன். ஏன் என்று கேட்டது அந்தச் செய்தி.

ரிப்ளை செய்ய தோன்றாமல் பாக்கெட்டில் போட்டு நேரம் பார்த்தான்.

சாப்பாடு மடிக்கும் வேலைக்குப் போக இன்னும் அரை மணிநேரம் இருந்தது. அதற்குள் சென்று விடலாம் என்று நினைத்தபடி சலீம் சென்றுகொண்டிருந்தான்.

சிறுகதையின் மொத்தச் சொற்கள் : 2790